## சுருக்கம்

பணியமைப்பு – நீர்வளத்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. ரா.கார்த்தி, த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. ரா.ராஜ்குமார் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

36729

## நீர்வள(பி1)த் துறை

அரசாணை (3ப) எண்.40

நாள் : 10.08.2023
சோபகிருது, ஆடி – 25,
திருவள்ளுவர் ஆண்டு, 2054

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), நீர்வளத் துறை, சென்னை அவர்களின் கடித எண். எஸ்.3(2)/27320/ 2023, நாள் 03.05.2023.

-----

**ஆணை:-**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், நீர்வளத் துறையில், திருவண்ணாமலை, வெள்ளாறு வடிநில கோட்டம், கள்ளக்குறிச்சி அலுவலகத்தில் உதவியாளாகப் பணிபுரிந்து வந்த திரு. ரா.ராஜ்குமார், 31.05.2018 அன்று காலமானதை அடுத்து, அவரது மகனான திரு. ரா.கார்த்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர், நீர்வளத்துறை, பன்முக ஒருங்கிணைந்த திட்ட மேலாண்மை அலகு, சென்னை அலுவலகத்தில் 29.09.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்று தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 29.09.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), நீர்வளத் துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு சுவர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி

நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், திரு. ரா.கார்த்தி பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீர்வளத்துறையில் கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 29.09.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணி வரன்முறை செய்வதால் தனியர் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகையினைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.5191/ட்டி.1/2023-1, நாள் 19.07.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா. எண்.5222093/ஜி.1/2023, நாள்.01.08.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>:-

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத் துறை, சென்னை - 5.
திரு. ரா.கார்த்தி, இளநிலை உதவியாளர். (முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத் துறை, சென்னை – 5 வழியாக)

<u>நகல்</u>:-

மாநில கணக்காயர், சென்னை -18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜி.செ.சாரதா தேவி 10/8/23
பிரிவு அலுவலர்

10/08/2023